

வேலூர் மாவட்டம் காட்பாடி தாராபடவேடு கழிஞ்சூர் ஏரிகளை சுற்றுலாத்தலமாக புனரமைக்க ரூ.27கோடி மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டிய கழக பொது செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று ஆய்வுகள் மேற்கொண்டார். இதில் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார்எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சியர் பெ.குமரவேல் பாண்டியன், மாநகர மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில் குமார் மற்றும் பகுதி, வட்ட கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ள உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நூலகம் திறப்பு விழா நடைபெற உள்ள மதுரை ஆயுதப்படை மைதானத்தில் விழா முன்னேற்பாடு பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் , மாநகர காவல் ஆணையாளர் , மதுரை மாநகராட்சி ஆணையாளர், மாவட்ட வருவாய் அலுவலர் பொதுப்பணித்துறை அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்

### ஏ.எல்.எஸ்.லெட்சுமணன் தலைமை! நெல்லை மத்திய மாவட்டம் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

### அமைச்சர் எஸ்.ஆர்.ராஜகண்ணப்பன் - ஆ.இராசா எம்.பி., டி.பி.எம்.மைதீன்கான் சிறப்புரை!

நெல்லை.ஜுலை 10 - நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் ஏற்பாட்டில் 12.07.2023 புதன்கிழமை பாளையங்கோட்டை பேருந்து நிலையம் எதிரில் மாலை 500 மணி அளவில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஏ.எல். எஸ். லெட்சுமணன் தலைமையில் நடைபெறுகிறது.இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி.பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா ஓராண்டு விழாவாக கொண்டாட வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். அதன்படி நெல்லை மத்திய மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

நெல்லை மத்திய மாவட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் 12. 07.2023 புதன்கிழமை பாளையங்கோட்டை பேருந்து நிலையம் எதிரில் மாலை 5 மணி அளவில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஏ.எல். எஸ். லெட்சுமணன் தலைமையில் மாவட்ட அவை தலைவர் முருகன், மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ், தர்மன்,மாவட்ட பொருளாளர் வண்ணை சேகர்,ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. நிகழ்ச்சியை மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலைராஜா தொகுத்து வழங்குகிறார். தலைமை செயற்குழு உறுப்பினர் பேச்சி பாண்டியன்,மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன்,துணை மேயர் ராஜ், ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் கழக துணை பொது செயலாளர் ஆ.ராசா எம்.பி. பிற்படு த்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரிய அமைச்சர் ஆர். எஸ்.ராஜகண்ணப்பன், ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

கூட்டத்தில் மாநில மகளிர் அணி செயலாளர்,பாளை தொகுதி பார்வையாளர் ஹெலன் டேவிட்சன், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர்,நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார்,

பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல்வகாப், தலைமை தீர்மானகுழு உறுப்பினர் சுப.சீத்தா ராமன்,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்,நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன்,கழக மூத்த முன்னோடிகள் அரசு கோதண்ட ராமன்,குமார சுப்பிரமணியன், சாகுல்ஹமீது,சுடலையாண்டி, கரீம், ஐஸ் மூக்கன், கண்ணையா, கிட்டா பாண்டியன் காட்டுபாவா, சர்புதீன், மாநகர கழக நிர்வாகிகள் அப்துல் கையூம், பாலமுருகன் என்ற பிரபு,சுதா மூர்த்தி, பகுதி கழக செயலாளர்கள் சுப்பிரமணியன்,துபாய் சாகுல், நமச்சிவாயம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை, மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன்,ஒன்றிய கழக செயலாளர்கள் அருள் மணி, அன்பழகன்,மாரியப்பன்,வேலங்குளம் முருகன்,பேரூர் கழக செயலாளர்கள் செல்வபாபு ,பேச்சிக்குட்டி,மாவட்ட, மாநகர,பிரதிநிதிகள்,பகுதி கழக நிர்வாகிகள், முன்னாள் மாவட்ட கழக நிர்வாகிகள்,அனைத்து அணி அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள்,வட்ட கழக செயலாளர்கள்,கழக உடன்பிறப்புகள்,தலைமை கழக பேச்சாளர்கள் உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொள்கின்றனர்.


நிகழ்ச்சி நிறைவில் மாநகர பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை, வட்ட கழக செயலாளர் கதிரேசன் ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் செய்துள்ளார்.

### திராவிட அரசுகளின் ஆதி விதையாக விளங்கும்

# பனகல் அரசர் வழி நடப்போம்! தமிழ்நாட்டை முன்னேற்றுவோம்!

### பனகல் அரசர் பிறந்தநாளை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!



சென்னை, ஜுலை 10- திராவிட அரசுகளின் ஆதிவிதையாக விளங்கும் பனகல் அரசர் அவர்களின்பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**திராவிட அரசுகளின் ஆதிவிதையாக விளங்கும் பனகல் அரசர் அவர்களின் பிறந்த நாள் இன்று!**

**அதிகாரத்தை நாம் அடைவதன் மூலம் நமது மக்களுக்கு நம்மால் எத்தகைய நன்மைகளைச் செய்ய முடியும் என்பதை வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துக்கான அரசாணை, மருத்துவம் படிக்க சமஸ்கிருதம் தேவையில்லை, பெண்களுக்கு வாக்குரிமை, அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் போன்ற எண்ணற்ற புரட்சிகரத் திட்டங்களால் காட்டியவர் அவர்! பனகல் அரசர் பற்றிய துணைப்பாடக் கட்டுரைதான் பள்ளி மாணவராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞருக்கு அரசியல் அரிச்சுவடியாக விளங்கியது.**

**“தேடற்கரிய ஒப்புயர்வற்ற நமதருமைத் தலைவர்” எனத் தந்தை பெரியார் போற்றிய பனகல் அரசர் வழிநடப்போம்! தமிழ்நாட்டை முன்னேற்றுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### இந்தியாவில் விரைவில் வருகிறது!

# 24 மணி நேரமும் இயங்கும் காணொலி நீதிமன்றங்கள்!

புதுடெல்லி, ஜுலை 10 - அனைத்து வழக்குகளையும் விசாரிக்க 24 மணி நேரமும் இயங்கும் காணொலி நீதிமன்றங்கள் விரைவில் செயல்பாட்டுக்கு வர உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இப்போது 17 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 21 காணொலி நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. ஆனால் இவை அனைத்தும் போக்குவரத்து விதிமீறல் தொடர்பான வழக்குகளை மட்டுமே கவனித்து வருகின்றன. இந்த நீதிம ன்றங்கள் இதுவரை 2.4 கோடிக்கும் கூடுதலான வழக்குகளை விசாரித்து உள்ளன. 33 லட்சம் வழக்குகளில் இணையவழியில் ரூ.360 கோடிக்கும் மேல் அபராதம் விதிக்கப்பட்டு ள்ளது.

இந்நிலையில், அனைத்து வழக்குகளையும் விசாரிப்பதற்காக 24 மணி நேரமும் இயங்கும் காணொலி நீதிமன்றங்கள் விரைவில் செயல்பாட்டுக்கு வர உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இது தொடர்பாக ஒருங்கிணைந்த ஆராய்ச்சிக்காக தங்கள் கருத்துகளை ஆகஸ்ட் 1ம் தேதிக்குள் சமர்ப்பிக்க நீதித்துறை கல்வி நிறுவனங்கள், சட்ட பல்கலைக்கழகங்கள், ஐஐஎம்கள் மற்றும் ஐஐடிகளை மத்திய சட்ட அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

வழக்கில் தொடர்புடையவர்கள், வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களுக்கு நேரில் வருவதைக் குறைப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மத்திய சட்ட அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காணொலி நீதிம ன்றங்களை நீதிபதிகள் காணொலி மூலம் நிர்வகிப் பார்கள். அந்த நீதிபதிக ளின் அதிகார வரம்பு மாநிலம் முழுவதற்கும் விரிவாக்கப்படுவதுடன் பணி நேரம் 24 மணி நேரமாக (24/7) இருக்கும். ஆராய்ச்சி திட்டத்தின் ஒரு பகுதியாக, நீதித் துறை பணிகளை விரைவு படுத்தும் நோக்கில் மத்திய சட்ட அமைச்சகம் அவ்வப்போது ஆய்வுகளை மேற்கொள்கிறது. இதற்காக அமைக்கப்படும் குழுக்கள் புதுமையான ஆலோசனைகளை வழங்கி வருகின்றன. அதன்படி அவ்வப்போது நீதித் துறையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பது குறிப்பி டத்தக்கது.

### கன்னியாகுமரி மாவட்டம்

# குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திட்டப் பணிகள்!

### அமைச்சர் மனோ தங்கராஜ் ஆய்வு மேற்கொண்டார்!

குளித்தலை, ஜுலை 10 கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் 08.07.2023 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த இரண்டு ஆண்டுகளில் கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சி கள், ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதியில் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கு ஆணை பிறப்பித்து பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட ஞாறாம்விளை பகுதியில் ரூ.1.52 கோடி மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் மின்மயான பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து மார்த்தாண்டம் கீழ்பம்மம் பகுதியில் ரூ.34 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் நிலையம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் மார்த்தாண்டம் காய்கறி சந்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதோடு, சந்தையினை மேம்படுத்துவது குறித்து துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது.

இவ்வாறு பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் குழித்துறை நகராட்சி ஆணையர் திருமதி.ராமதிலகம், நகராட்சி செயற்பொறியாளர் திருமதி. பேரின்பம், பணி மேற்பார்வையாளர் விஜயதாஸ், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# வட மாநிலங்களை தொடர்ந்து மிரட்டும் கனமழை!

புதுடெல்லி, ஜுலை 10 வட மாநிலங்களில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. தலைநகர் டெல்லியின் பல்வேறு பகுதிகளில் பெய்த மழையால் சாலைகள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன.

அதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. டெல்லி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நேற்று காலை முதலே மழை பெய்து வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. டெல்லியில் வரலாறு காணாத அளவில் ஒரே நாளில் 153 மிமீ மழை பதிவாகி உள்ளது.

மழை, வெள்ளம் தொடர்பான விபத்துகளில் பலர் பலியாகி உள்ளனர். டெல்லியில் வீட்டின் கூரை இடிந்து விழுந்து 58 வயது நபர் உயிரிழந்தார். ராஜஸ்தானில் கடந்த 24 மணி நேரத்தில் 4 பேர் பலியாகி உள்ளனர். ஜம்மு காஷ்மீரில் மழையால் ஆங்காங்கே நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளது.

அரியானா மற்றும் பஞ்சாப் மாநிலங்களின் பல பகுதிகளிலும் கனமழை பெய்துள்ளது. தலைநகர் சண்டிகரில் நேற்று முன்தினம் நாள் முழுவதும் மழை கொட்டித் தீர்த்தது.

### தி.மு.க. பொறியாளர் அணி

# மதுரை மாநகர் மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

### பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி அறிவிப்பு!

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணியின் அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட கோ.இளங்கோவன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, அ.வினோத், (127, முனியாண்டி கோவில் தெரு, ஜவகர்புரம், மதுரை7) அவர்கள் மதுரை மாநகர் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 8.7.2023

கு.கருணாநிதி
செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## பா. அம்பிகா

### ஜுலை 10 (2017)



**கம்பம் நகரக் கழகச் செயலாளராக பணியாற்றி வந்த தனது கணவருடன் இணைந்து கழகப் பணியாற்றி வந்த இவர், கழக மகளிர் அணியில் தன்னை இணைத்துக் கொண்டு கடலூரில் நடைபெற்ற மகளிர் அணி மாநாட்டில், தமது பகுதியில் உள்ள 300க்கும் மேற்பட்ட மகளிர் அணியினரை பங்கேற்கச் செய்தவர்.**

**2006ஆம் ஆண்டு கம்பம் நகர்மன்றத் தலைவராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, கம்பம் நகர கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டு வர முயற்சி மேற்கொண்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழக அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதோடு, பெருந்திரளாக மகளிர் அணியினரை திரட்டி பங்கேற்கச் செய்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தமிழ்நாட்டில் ஆவண எழுத்தர் நல நிதியக்குழு!

### வணிகவரி - பத்திரப் பதிவுத் துறை அறிவிப்பு!

சென்னை, ஜுலை 10 - தமிழ்நாடு ஆவண எழுத்தர் நல நிதியக்குழு 2.12.2022 முதல் அரசாணை எண்.175, வணிகவரி மற்றும் பதிவு (எம்2) துறை, நாள் 1.12.2022 வாயிலாக நிறுவப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்டது.

பதிவுத்துறை தலைவர் தமிழ்நாடு ஆவண எழுத்தர் நல நிதிய குழுவில் உறுப்பினர்கள் நியமிப்பது குறித்த கருத்துருவை அரசுக்கு அனுப்பியுள்ளார். அதனை ஏற்று 2022ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஆவண எழுத்தர் நல நிதிய விதிகளில், விதி 4ன்படி தமிழ்நாடு ஆவண எழுத்தர் நல நிதியக்குழுவில் பின்வரும் ஆவண எழுத்தர்களை உறுப்பினர்களாக மூன்று ஆண்டுகளுக்கு நியமனம் செய்து அரசாணை (டி)எண்.199, வணிகவரி மற்றும் பதிவு(எம்2)த் துறை, நாள் 08.07.2023 வெளியிடப்பட்டுள்ளது.

1. எஸ்.பத்மநாபன், த/பெ. எஸ்.சுப்பிரமணியன், நெ.234, குமரன் சாலை, திருப்பூர் 641601.

2. ஜி.கண்ணன், த/பெ. கே.கணேசன், நெ.76/1. திருவள்ளுவர் தெரு, ஜெயநகர், பொன்மேனி, மதுரை 625 016.

3. ஆர்.முத்துக்குமார், த/பெ. ஆர்.எம்.இராமச்சந்திரன், நெ.17/1, நயினா வடக்குத்தெரு, இராமநாதபுரம்623.501.

4. ஜி.சிவசங்கரராமன், த/பெ. பி.கணபதி, 4/700, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், எட்டையபுரம், தூத்துக்குடி-628 002.

இவ்வாறு வணிகவரி மற்றும் பதிவுத் துறைச் செயலர் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி பேரூராட்சி, கொல்லங்காட்டில், புதிய மின்மாற்றியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, செயற்பொறியாளர் திருமதி.எம்.ஆனந்தாய், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் குழந்தைசாமி, பொன்னமராவதி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.சுதா அடைக்கலமணி, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் திருமதி.சுந்தரி அழகப்பன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.